
# தமிழகத்தில் மின் வெட்டு

தலைவர் கலைஞர்



# தமிழகத்தில் மின் வெட்டு

தலைவர் கலைஞர்

வெளியீடு:
**திராவிட முன்னேற்றக் கழகம்**
"அண்ணா அறிவாலயம்"
367 & 369, அண்ணா சாலை,
சென்னை – 600 018.

முதற்பதிப்பு : டிசம்பர் 2012.

விலை : ரூ. 5 /-

அச்சிட்டோர் : அஸ்வின் பிரிண்டிங் ஏஜென்சி, சென்னை-14.

# அசந்துதான் போனார்கள்!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு ஒன்றரை மணி நேரம் பதிலளித்து உரையாற்றியிருக்கிறார் – இல்லை யில்லை – பதில் உரையை படித்திருக்கிறார். உரையின் தொடக்கத்திலேயே "அவை நடவடிக்கையில் கலந்துகொள்ளாத ஒரு மூத்த சட்டமன்ற உறுப்பினர்" என்று என்னை மறைமுகமாகத் தாக்கி, அதற்கு பதில் கூற தி.மு. கழக உறுப்பினர்களுக்கு அனுமதி மறுத்து, அவர்களையெல்லாம் வெளியேற்றிவிட்டு – அதற்கு முன்பாகவே இரண்டு நாட்களுக்கு முன்பு அவையின் எதிர்க்கட்சித் தலைவர் மீது அவசர அவசரமாக உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து, ஆளுநர் உரைமீது கூட எதிர்க்கட்சித் தலைவர் உரையாற்றுவதற்கான வாய்ப்பினை வழங்காமல் – எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் வழங்கப்பட்ட கார், போலீஸ் பாதுகாப்பு போன்றவை களைக் கூட பெருந்தன்மையாக அனுமதிக்காமல் – அவர்களையெல்லாம் அவைக்கு வராமல் செய்துவிட்டு – எதிர்த்துக் கேள்வி கேட்க யாரும்

இல்லாத நிலையில் தனது பதில் உரையை முதலமைச்சர் ஆற்றி முடித்திருக்கிறார்.

பேச்சின் தொடக்கத்தில், "தோற்றது கழகமல்ல, வாக்காளர்களாகிய நீங்கள்"தான் என்று காஞ்சிபுரம் வீர வணக்க நாள் பொதுக் கூட்டத்தில் நான் பேசியதைக் குறிப்பிட்டு, அது தமிழக வாக்காளர்களையும், சட்டமன்றத்தையும் கொச்சைப்படுத்தி பேசியதாகச் சொல்லி யிருக்கிறார். நான் சட்டமன்ற நடவடிக்கை களில் கலந்துகொள்ளவில்லை என்பதைச் சுட்டிக்காட்டும் ஜெயலலிதா எதிர்க்கட்சியாக இருந்த போது ஓரிரு நாட்கள் மட்டுமே அவையின் நடவடிக்கைகளில் பங்கேற்றார் என்பதை தமிழகம் அறியும். இன்றைய தினம் வீம்புக்காக பழைய கட்டிடத்திலேயே அவையை நடத்துவதால், நல்ல உடல் நலத்தோடு இருக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளே நடந்து சென்று தங்கள் இருக்கைகளில் அமர முடியாமல் தவிக்கின்ற போது, எனது உடல் நிலையைக் கருத்தில் கொண்டால், பேரவைக்குள் சக்கர நாற்காலியில் சென்றமர்ந்து உரையாற்றுவதற்கான வசதி இல்லை என்பதையும் அவை உறுப்பினர்களே நன்கறிவார்கள். அவையில் நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் பேசிய அம்மையார் குறிப்பிட்டுள்ள எனது காஞ்சிபுரம் பொதுக் கூட்டப் பேச்சில் வாக்காளர்களையும், சட்டமன்றத்தையும் எங்கே கொச்சைப்படுத்தியிருக்கிறேன்.

எனது காஞ்சிப் பேச்சில் இன்றைய ஆளுங்கட்சியைப் பற்றிக் கூட நான் எதுவும் கூறவில்லையே! மொழிப் போராட்டங்கள் பற்றித்தான் பேசினேன். ஆனால் நான் 2–2–2012 அன்று எழுதிய "உடன்பிறப்பு மடலில்" ஆளுநர் உரை பற்றி எழுதும்போது, இரண்டு பக்கங்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியின் தவறுகளையெல்லாம் பட்டியலிட்டிருக்கிறேனே, அதற்கெல்லாம் முதல் அமைச்சரின் பதில் எங்கே? அமைச்சரவை மாற்றம், அதிகாரிகள் மாற்றம், நீதிமன்றங்களின் தீர்ப்பு, பேருந்துக் கட்டண உயர்வு, பால் விலை உயர்வு, டாஸ்மாக் ஏலத்தில் நடைபெற்ற முறைகேடு, காவல் துறையினரே ஈடுபட்ட பாலியல் தவறுகள் என்றெல்லாம் சுட்டிக்காட்டியிருந்தேனே; அதற்கெல்லாம் முதல் அமைச்சரின் விளக்கம் என்ன? அந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்லாமல் நான் அவைக்கு வரவில்லை என்றெல்லாம் சொல்வதா பதில்?

நான் ஏதோ கொச்சைப்படுத்தி பேசியதாக முதலமைச்சர் சொல்லுகிறார்! ஆனால் அவரது நேற்றைய பேச்சிலேயே நான் அளித்த பேட்டியில், "இந்த மாதிரியான நேரங்களில் எந்த அரசாக இருந்தாலும், அந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சியின் பணி என்று கருதுபவன் நான். எனவே அந்தப் பணியை முறையாகச் செய்திருக்கிறேன்" என்று கடலூரில் நான் கூறியதையும் குறிப்பிட்டிருக்கிறார். அது அண்ணா

அவர்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த அரசியல் நாகரிகம். ஆனால் நான் சட்டமன்றத்திற்கே வர முடியாத நிலையை உருவாக்கிவிட்டு, அதையே கிண்டல் செய்து, என்னைத் தாக்கிப் பேரவையிலே பேசியிருப்பது இன்றைய முதலமைச்சர் கற்ற நாகரிகம்.

அவரது நீண்ட உரையில் கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் "தானே" புயல் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சிறப்பு தொகுப்புத் திட்டம் ஒன்றை, இதுபோன்று புயல், வெள்ளம் ஏற்படுகின்ற நேரங்களில் எல்லாம் வழங்கப்படும் சலுகைகளை அறிவித்திருக்கிறார். அதிலேகூட 2000, 2008ஆம் ஆண்டுகளில் தி.மு. கழக ஆட்சியில் சிறிய இயற்கை சீற்றங்கள் ஏற்பட்ட போது செய்யப்பட்ட நிவாரண உதவியோடு ஒப்பிட்டுக் காட்டி தற்போது மிக அதிக அளவில் நிவாரண பணிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லி யிருக்கிறார். எப்படியோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் கிடைப்பதை தி.மு. கழகம் வரவேற்கவே செய்கிறது.

அடுத்து முதலமைச்சர் ஜெயலலிதா தனது பதில் உரையில் கூடங்குளம் அணு மின் நிலையம் பற்றி அப்பகுதி மக்களிடையே நிலவி வரும் எண்ணங்கள் மற்றும் அச்ச உணர்வுகள் குறித்து மாநில அரசுக்கு அறிக்கை அளிக்கும் வகையில் மாநில அரசால் ஒரு வல்லுநர் குழு உடனடியாக நியமிக்கப்படும் என்று கூறியிருக்கிறார். ஆனால் இதே

ஜெயலலிதா 19–9–2011 அன்று பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் இந்தப் பிரச்சினையில் சுமூகத் தீர்வு ஏற்படும் வரை, கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பணிகள் எதையும் தொடர வேண்டாம் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தற்போது மாநில அரசால் ஒரு வல்லுநர் குழுவினை உடனடியாக நியமிக்கப்படும் என்று அறிவித்துள்ள ஜெயலலிதா, அப்போதே இந்தக் குழுவினை அமைத்திருக்கலாம் அல்லவா? போராடுகின்ற மக்களை ஏமாற்றுவதற்காக அப்போது பிரதமருக்கு மாநில அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டதா? இப்போதும் அவர்களை ஏமாற்றுவதற்காகத்தான் மாநில அரசின் சார்பில் வல்லுநர் குழுவினை அமைக்கப் போவதாக ஜெயலலிதா அறிவித்திருக் கிறாரா? அது மாத்திரமல்ல; கூடங்குளம் போராட்டக் குழுவினரும், மத்திய அரசின் சார்பாக, மத்திய அமைச்சர் மாண்புமிகு நாராயண சாமி அவர்களும் முதல் அமைச்சரைச் சந்தித்த பிறகு, தமிழக அமைச்சரவை 22–9–2011 அன்று கூடி கூடங்குளம் அணு மின் நிலையம் பற்றிய அந்தப் பகுதி மக்களின் அச்சம் தீர்க்கப்படும் வரை அணு மின் நிலையப் பணிகளை நிறுத்தி வைக்குமாறு பிரதமரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானத்தை நிறைவேற்றி னார்களே, அதுவும் அந்தப் பகுதி மக்களை ஏமாற்றுவதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானமா?

அடுத்து தனது பதிலுரையில் முதலமைச்சர் ஜெயலலிதா ஜூன் மாதம் முதல் மின் பற்றாக்குறை படிப்படியாகக் குறையும் என்றும், அடுத்த ஆண்டு மத்தியில் மின் பற்றாக்குறை முழுவதுமாக நீக்கப் படும் என்றும் சொல்லியிருக்கிறார். அ.தி.மு.க. தேர்தலுக்கு முன்பாக தேர்தல் அறிக்கையில் தாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றால் நான்கு மாதங்களில் மின் வெட்டு இல்லாமல் செய்வோம் என்றார்கள். ஆனால் தற்போது அடுத்து ஆண்டு மத்தியில் மின் பற்றாக்குறை முழுவதையும் நீக்குவோம் என்கிறார்கள். கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்குப் பதிலளித்த போதும் முதலமைச்சர் ஜெயலலிதா நீண்ட நேரம் மின் தட்டுப்பாட்டைப் பற்றித்தான் பேசி அதற்கு நான் விரிவாக அப் போதே "வருமா; எதிர்காலத்தில் மின் பற்றாக் குறை ?" என்ற தலைப்பில் 18–6–2011 அன்றே "முரசொலி"யில் எழுதியிருந்தேன். தற்போதும் அதே கருத்துக்களைத் தான் முதல் அமைச்சர் மீண்டும் பேசியிருக்கிறார். கடந்த ஐந்தாண்டுகளில் திமு.க. அரசு மின் திட்டங்களைச் செயற்படுத்தியிருந்தால் மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது என்கிறார் ஜெயலலிதா.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு மின் உற்பத்திக்காக என்னென்ன செய்யப்பட்டது என்று விளக்குகிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று 8–12–2006இல் 3 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கும்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 3 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய ஒரு திட்டம் 2–5–2007இல் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி விரைவில் இயக்கத்திற்கு வரும்.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய வகையில் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் 26–6–2007இல் தொடங்கப்பட்டது; இதன் உற்பத்தி விரைவில் நடைமுறைக்கு வரும்.

உடன்குடியில் பி.எச்.ஈ.எல்., மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின் கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் 15–10–2007இல் 8 ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன. இதில் ஓர் அலகு 2013ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும்; மற்றொரு அலகு 2013ஆம் ஆண்டு

செப்டம்பர் மாதத்திலும் நடைமுறைக்கு வந்து உற்பத்தியைத் தொடங்கும்.

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 14–7–2008இல் தொடங்கப்பட்டது.

ஆயிரத்து 126 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து, 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம், 14–12–2009இல் தொடங்கப்பட்டது. மொத்தம் 4183 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற் கான திட்டங்கள் தி.மு. கழக ஆட்சியில் தொடங் கப்பட்டன. 2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையை கருத்தில் கொண்டு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2010–2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும், 2011–2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும், 2012–2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும், 2013–2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் – ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம் பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

இந்தப் புள்ளி விவரங்கள், தி.மு. கழக ஆட்சி யில் புதிதாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக் கூடிய

திட்டங்கள் எதையும் தொடங்கவில்லை என்ற குற்றச்சாட்டிற்குத் தேவையான திடமான விளக்கமாக அமையுமென்று கருதுகிறேன்.

2006ஆம் ஆண்டு தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்த பின்னர் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கு தொடங்கப்பட்டதால் மின் தேவை அதிகமாயிற்று. 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை ஆட்சியிலே இருந்த, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே எதிர்காலத் தேவையைக் கணக் கிட்டு இந்த அளவிற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்குமானால், தற்போது தேவையான மின் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கும், தமிழகத்திலே பற்றாக்குறை வந்திருக்காது.

2001 முதல் 2006 வரையிலான தனது ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாக இருந்தது என்று ஜெயலலிதா சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே 16–10–1992 வரை தமிழ்நாட்டில் மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா? இல்லையா? அது போலவே 3–10–1982 முதல் 26–7–1984 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா இல்லையா? 2006ஆம் ஆண்டு தி.மு.க.

ஆட்சிக்கு வந்த பிறகு அதிகத் தொழிற் சாலைகளை தமிழகத்திலே தொடங்காமல் இருந் திருந்தால் மின் கட்டுப்பாட்டு முறை வந்திருக் காதுதான். அதற்காக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காமல் ஓர் அரசு இருக்க முடியுமா ?

அ.தி.மு.க. ஆட்சியிலே மின் உற்பத்தி திட்டங் களை அதிகமாகத் தொடங்காத காரணத்தால் கழக ஆட்சியிலே மின் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் தி.மு.கழக ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியதன் பயன் நிச்சயமாக வருங்காலத்தில் மின் பற்றாக்குறையை தமிழகத்தில் இல்லாமல் செய்திடும் என்று உறுதியாக நம்பலாம்.

சில நாட்களுக்கு முன்பு பேரவையில் பேசிய முதலமைச்சர் ஆளுநர் உரைக்கு தான் ஆற்றவிருக்கின்ற பதிலுரை கேட்டு எதிர்க் கட்சியினர் அசந்து போவார்கள் என்று கூறியிருந்தார். அது உண்மைதான்! அவரது ஒன்றரை மணி நேர உரை கேட்டு ஆளுங்கட்சி யினரே "இதுதானா அசந்துபோக வைக்கக் கூடிய உரை" என்று அசந்துதான் போயிருப் பார்கள்! ஏனென்றால் அவரது உரையைக் கேட்க முக்கிய எதிர்க்கட்சியினரே இல்லையே ?

'முரசொலி'

6–2–2012

அன்புள்ள,

**மு.க.**

## வேறு சான்றுகள்; வேண்டுமா ? என்ன ?

கேள்வி :– மின்வெட்டு காரணமாக ஏற்பட்ட குழப்பத்தினால் கணவனை விட்டு விட்டு, இன்னொருவரின் "பைக்"ல் ஏறிச் சென்ற பெண்மணியைப் பற்றி நேற்றைய "முரசொலி"யில் "கும்மிருட்டு வேதனை; குடும்பத்திலும் குழப்பமா ?" என்று நீங்கள் எழுதியதற்குப் பிறகாவது இந்த ஆட்சி யினர் அதற்காக வெட்கப்படுவார்களா ?

கலைஞர் :– எனக்கு நம்பிக்கை இல்லை! மின் வெட்டுக் காரணமாக எத்தகைய நகைச்சுவை சம்பவங்கள் நடைபெறக் கூடும் என்று "டைம்ஸ் ஆப் இந்தியா" இதழில் பி. சிவகுமார் வெளியிட்டுள்ள சில நிகழ்வுகள் இதோ!

தகவல் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள "பேஸ்–புக்" என்ற அமைப்பிலே வெளியாகியுள்ள கேள்வி–பதில் பகுதியில் ஒரு கேள்வி!

"மின்சாரம் எப்போது வரும் என்று யாருக்காவது தெரியுமா ?" இது கேள்வி. இதற்கு நான்கு பதில்கள் கொடுத்து, அதிலே எந்த பதில் சரியானது என்று கேட்கிறார்கள். முதல் பதில் : எனக்குத் தெரியும்;

இரண்டாவது பதில் : உனக்குத் தெரியும்; மூன்றாவது பதில் : மின் வாரியத்திற்குத் தெரியும்; நான்காவது பதில் : ஒருவருக்கும் தெரியாது. சரியான பதில் கூறுவோருக்கு ஒரு கோடி ரூபாய் பரிசு என்று அறிவிக்கப்பட்டதாம். மின் வெட்டினைப் பற்றிய ஒரு கிண்டல் செய்தி இது.

அதே "பேஸ்–புக்" கில் வெளிவந்துள்ள ஒரு படம். அதிலே கிராமப் பகுதியிலே நீண்ட மின் கம்பிகள் செல்லுகின்றன. அந்தக் கம்பி களில் பல சிறுவர்கள் தொங்கிக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுக்கு அது மின் கம்பிகள் என்பதோ – அதிலிருந்து மின்சாரம் தங்களைத் தாக்கக் கூடும் என்றோ கவலையில்லை. இப்படி ஒரு படம்.

இன்னொரு படம். அதிலே மின் கம்பங் களுக்கு இடையே உள்ள மின் கம்பிகளில் தாய்மார்கள் தங்கள் வீட்டில் துவைத்த துணிமணிகளை உலர்த்திக் கொண்டிருக் கிறார்களாம்.

திருப்பூர் மாவட்டத்திலே உள்ள குமாரபாளையம் நகரில் சுவர்களில் பலர் போஸ்டர் ஒட்டிச் சென்றார்கள். அதிலே உள்ள வாசகங்கள் : "கடந்த ஆட்சியில் இரண்டு மணி நேரம் மட்டுமே மின் வெட்டு செய்த முன்னாள் மின் துறை அமைச்சருக்கு நன்றி! நன்றி!"

கோவையில் வாழ்வோர் ஒரு போராட்டம் நடத்துகிறார்களாம். அவர்கள் கையிலே உயிரோடுள்ள ஒரு பாம்பு! இரவிலும் மின்வெட்டு தொடர்வதால், தங்கள் வீடுகளில் விஷ ஜந்துக்கள் நுழைவதாகவும், அதை எதிர்த்துத்தான் போராட்டம் என்றும் அறிவித்தார்களாம்!

திருவாரூர் மாவட்டத்தில், நீடாமங்கலத் திலே உள்ள வணிகர்கள் சங்கமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியில் உள்ள வீடியோ மற்றும் புகைப்பட நிபுணர்கள் சங்கமும் அண்மையில் ஒட்டிய சுவரொட்டியில், “ஏற்கனவே உபயோகத்தில் இருந்து, அண்மைக்காலமாக காணாமல் போய்விட்ட மின்சாரத்தை யாராவது தேடித் தாருங்கள்” என்ற வாசகங்கள் அச்சடிக்கப்பட்டிருந்ததாம்.

தஞ்சை மாவட்டத்தில் ஒரு டீக்கடை உரிமையாளர் பி. முனுசாமி என்பவர் வடை வியாபாரி. தனது வியாபாரம் பாதிக்கப்பட் டுள்ளவர். அவர் என்ன சொல்கிறார் பாருங்கள்! “வடைக்கான மாவு அரைக்க விடியற்காலை 5 மணியிலேயிருந்து மின்சாரத் திற்காக காத்திருக்கிறோம். வருந்துகிறோம்” என்றாராம்.

அ.தி.மு.க. ஆட்சியிலே மின்வெட்டு எந்த அளவிற்கு சிரிப்பாய் சிரிக்கிறது என்பதற்கு இதைவிட வேறு சான்றுகள் வேண்டுமா என்ன?

**‘முரசொலி’** **கலைஞர் பதில்கள்**
**17.10.2012**

# மின்வெட்டு தீரும் நாள் எந்நாளோ?

உடன்பிறப்பே,

காவல் துறை, சிறைத்துறை, தீயணைப்புத் துறையில் பணியாற்றும் சீருடை பணியாளர் களுக்கு வீடுகள் கட்டித் தரும் பணிக்கு அடிக்கல் நாட்டிய நம்முடைய முதல் அமைச்சர் ஜெயலலிதா அவர்கள் மின்சாரத்தைப் பற்றியும், மின் வெட்டைப் பற்றியும் விலாவாரியாகப் பேசி, மத்திய அரசையும், கடந்த கால கழக அரசையும் எந்த அளவிற்கு குறை கூற முடியுமோ அந்த அளவிற்குத் தாக்கிப் பேசி, இறுதியாக அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று முடித்திருக்கிறார். ஆனால் ஆட்சிக்கு வருவதற்கு முன் ஊருக்கு ஊர் பேசிய கூட்டங்களில் ஜெயலலிதாவும் அவரது கட்சியினரும் என்ன சொன்னார்கள்? ஆட்சிக்கு வந்த மூன்றே மாதங்களில் மின் வெட்டு இல்லாமல் செய்வோம் என்று சொல்லிவிட்டுத்தான் ஆட்சிக்கு வந்தார்கள். ஆனால் இப்போது அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று சொல்லுகிறார். எப்போது வேண்டுமானாலும் தீர்க்கட்டும்! ஆனால் தேவையில்லாமல் மத்திய அரசின்

மீதும் கழக ஆட்சியின் மீதும் குறை கூறுவது நியாயம் தானா ?

ஜெயலலிதாவின் நீண்ட உரையில் கழகத்தின் மீது சாட்டியுள்ள குற்றச் சாட்டுகளுக்கு மட்டும் நான் பதில் கூறுகிறேன். அம்மையார் எதையெடுத்தாலும் துரோகம் என்று சொல்லாவிட்டால் பேச்சே முழுமை பெறாது. காவிரியை எடுத்துக் கொண்டாலும், மின்சாரத்தை எடுத்துக் கொண்டாலும் நான் செய்த துரோகம் ஒன்று, இரண்டு என்று சொல்லத் தவறுவதில்லை. பொதுவாக ஜெயலலிதா துரோகத்தைப் பற்றிப் பேசலாமா ? இவரை விடவா துரோகத்திற்கு எடுத்துக் காட்டாக வேறொருவர் திகழ முடியும் ? தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல, இந்தியாவிற்கே தெரிந்த விவரம் ஆயிற்றே ? "எனக்கு எல்லாமே எம்.ஜி.ஆர்.தான் என்று சொன்ன ஜெயலலிதா, எந்த எம்.ஜி.ஆர்., அரசியலிலே ஜெயலலிதாவை அழைத்து வந்து கொள்கை பரப்புச் செயலாளராக ஆக்கி, மாநிலங்களவை யில் உறுப்பினராக்கி உலகத்திற்கு அறிமுகப் படுத்தி வைத்தாரோ, அதே எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி தன் கைப்பட ஆங்கிலத்தில் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதத்தை "மக்கள் குரல்" நாளேடு அப்படியே நகல் எடுத்து வெளியிட்டு, தமிழகத்திலே முதல் துரோகி என்பதை பட்டை உரித்துக்

காட்டியிருக்கிறதே! இவர் என்னைப் பற்றி துரோகம் என்று கூறுவது கேலிக் கூத்து தானே?

ஏன்? இன்னமும் அவருடைய வீட்டிலே உடன்பிறவா சகோதரியாக உலா வந்து கொண்டிருக்கும் சசிகலாவை கட்சியை விட்டு நீக்கி – அவரது உறவினர்களை யெல்லாம் சிறையிலே தள்ளி – பின்னர் அவர்களை எல்லாம் விடுவித்ததற்கு பெயர் துரோகம் இல்லையா? ஏன்? அ.தி.மு.க. வின் வளர்ச்சிக் காக ஜெயலலிதாவுடன் பணியாற்றிய எத்தனையோ மூத்த தலைவர்கள், பிறந்த நாள் விழா நடத்திக் கொண்ட குற்றத்திற்காகவே என்ன ஆனார்கள் என்பதை தமிழகம் அறியாதா? எனவே இனியாவது ஜெயலலிதா தனது அறிக்கையிலோ, பேச்சுக்களிலோ இந்த "துரோகம்" என்பதை சுட்டிக் காட்டாமல் இருப்பது அவருக்கே நல்லது!

அடுத்து, ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும், வெளி மாநிலங்களில் இருந்து மின்சாரத்தை வாங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்த தாகவும், குஜராத் மாநிலத்தோடு மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போட்டதாகவும், மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கியும் தமிழகத்திற்கு கொண்டு வந்து சேர்க்க வழியில்லாத நிலை தான் தற்போது உள்ளது என்றும் ஜெயலலிதா பேசியிருக்கிறார். இதைவிட முன்யோசனை யற்ற செயல்பாடு ஒன்று இருக்க முடியுமா?

ஒரு மாநிலத்திடம் மின்சாரம் வாங்க ஒப்பந்தம் போடும்போதே, அதை வாங்க முற்படும்போது, அதை வாங்கினால் தமிழகத்திற்குக் கொண்டு செல்ல வழி இருக்கிறதா என்று பார்க்காமலே அ.தி.மு.க. அரசு ஒப்பந்தம் செய்தது என்றால்; அது, எவ்வளவு பெரிய தவறு ? ஒப்பந்தம் போட்ட போதே, மின் வாரியத்திலே உள்ள பொறியாளர் கள் எல்லாம், குஜராத்திலே மின்சாரம் வாங்கினால் அதை ஜெயலலிதா எப்படி கொண்டு வந்து சேர்க்கப் போகிறார் என்று கிண்டல் செய்து ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்களாம். இதுகூடத் தெரியாத நிலையில் குஜராத் மாநிலத்தோடு மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்யக் காரணமாக இருந்தவர்கள் யார் ? அதிகாரிகள் நிச்சயம் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்களே ?

அதுபோலவேதான் மத்திய அரசிடமிருந்து மின்சாரத்தைப் பெறுவதிலும், அவர்கள் கொடுக்க முன் வந்தால்கூட, அந்த மின்சாரத்தை எப்படி தமிழகத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பது என்ற திட்டம் இல்லாமல், அதைப் பற்றி யோசிக்காமல், பிரதமருக்கும், மத்திய அரசுக்கும் கடிதம் எழுதி விட்டால் பிரச்சினை தீர்ந்து விடுமா ?

மத்திய அரசை குறை கூறும் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்து இந்த 18 மாதங்களில் எத்தனை முறை டெல்லி சென்று தமிழகத்தின் மின்

தேவையைப் பற்றி பிரதமருடனோ, அல்லது துறையின் அமைச் சருடனோ பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறார்? ஏன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை? அவருக்குத் தனியாகச் சென்று கேட்க முடியாவிட்டால்கூட, சட்டப்பேரவையிலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அவர்களையும் அழைத்துக் கொண்டு போய் டெல்லியிலே ஒரு முறையாவது கேட்டுக் கொண்டது உண்டா? முதல் அமைச்சருக்கே அதிலே அவ்வளவு அக்கறை இல்லை என்கிற போது, தி.மு.க. மத்திய மந்திரிகள் அக்கறை காட்டவில்லை என்று அவர்கள் மீது குற்றம் கூறுவது எந்த விதத்தில் நியாயமோ; தெரியவில்லை!

கடந்த கால ஆட்சியிலே ஏன் "காரிடார்" அமைக்கவில்லை என்று கேள்வி கேட்கிறார் ஜெயலலிதா! அப்போது தமிழகத்திலே தற்போது ஏற்பட்டுள்ளதைப்போல மின் பற்றாக்குறை ஏற்பட்டிருக்குமேயானால், அப்போதே கழக அரசு மத்திய அரசிடம் "காரிடார்" அமைப்பதைப் பற்றிப் பேசியிருக்கும். ஆனால் கழக ஆட்சிக் காலத்திலே இந்த அளவிற்குப் பற்றாக்குறை இல்லை. எனவே "காரிடார்" அமைக்கத் தேவையும் ஏற்படவில்லை. இந்த அடிப்படை காரணமே புரியாமல், கழக ஆட்சிக் காலத்தில் காரிடார் அமைக்க ஏன் முயற்சிக்கவில்லை என்று

ஜெயலலிதா போலீசார் மத்தியிலே போய்ப் பேசினால் என்ன செய்வது ?

முதலில் ஒரு முதலமைச்சர் எங்கே, என்ன பேசுவது என்று தெரிய வேண்டாமா ? எங்கே சென்றாலும் ஒரு குட்டிக்கதை, எதிர்க் கட்சிகளைத் தாக்குவது என்ற போக்கினை எப்போதுதான் திருத்திக் கொள்ளப் போகிறார் ?

கழகம் ஆட்சியிலே இருந்த 2006–2011ஆம் ஆண்டு காலத்தில் மின் உற்பத்திக்கு எதுவுமே செய்யவில்லையா ? அதைப்பற்றியெல்லாம் எத்தனை கடிதங்கள், எத்தனை அறிக்கைகள் எழுதியிருக்கிறேன். முதலமைச்சர் அதை யெல்லாம் படிக்கவில்லையா ? இருந்தாலும் மீண்டும் நினைவுபடுத்துகிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் 3136 கோடி ரூபாயில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரித்திட ஒரு திட்டம் கழக ஆட்சியில் 2–5–2007 அன்று தொடங்கப்பட்டதா இல்லையா ? அந்தத் திட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு இறுதியி லேயே மின்சாரம் கிடைத்திருக்க வேண்டும். அந்தத் திட்டத்தில் தாமதம் ஏற்பட யார் காரணம் ? 2011இல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அல்லவா ?

எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று 8–12–2006இல் 3 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கும். 8–12–2006 என்பது யாருடைய ஆட்சிக் காலம்? கழக ஆட்சிக் காலம் அல்லவா? அப்போது தொடங்கப்பட்ட திட்டம்தானே இது?

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக்கூடிய வகையில் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டம் 26–6–2007இல் தொடங்கப்பட்டது; இதன் உற்பத்தி 2011 மே திங்களில் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டியது, தற்போது விரைவில் மின்உற்பத்தி இங்கே தொடங்கும் என்று செய்தி வந்துள்ளது. 26–6–2007 யாருடைய ஆட்சிக் காலம்? கழக ஆட்சிக் காலம் அல்லவா?

உடன்குடியில் பி.எச்.ஈ.எல்., மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் 15–10–2007இல் 8 ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன. இதில் ஒரு அலகு 2013ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும்; மற்றொரு அலகு 2013ஆம் ஆண்டு

செப்டம்பர் மாதத்திலும் நடைமுறைக்கு வந்து உற்பத்தியைத் தொடங்கும். இந்தத் திட்டம் தி.மு. கழக ஆட்சியிலே நான் முதல்வராக இருந்த போது தொடங்கப்பட்ட திட்டம் அல்லவா?

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 14–7–2008இல் தொடங் கப்பட்டது. இதன் உற்பத்தி 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல், நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. ஆட்சியிலே விரைந்து நடவடிக்கை எடுக்கப் படாததால், இத்திட்டத்தில் மின் உற்பத்தி தாமதமாகிறது.

ஆயிரத்து 126 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து, 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம், 14–12–2009இல் தொடங்கப்பட்டது. 2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையை கருத்தில் கொண்டு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2010–2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும், 2011–2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும், 2012–2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும், 2013–2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் – ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம்

பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

இந்தப் புள்ளிவிவரங்கள், தி.மு. கழக ஆட்சியில் புதிதாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக்கூடிய திட்டங்கள் எதையும் தொடங்கவில்லை என்ற ஜெயலலிதாவின் குற்றச்சாட்டிற்குத் தேவையான திடமான விளக்கமாக அமையுமென்று கருதுகிறேன்.

ஆனால் இதைப்போல அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் என்னென்ன திட்டங்கள் தொடங்கப் பட்டன என்பதை ஜெயலலிதா ஏன் தன்னுடைய நீண்ட பேச்சில் கூறவில்லை? மாறாக என்ன சொல்லுகிறார் என்றால், “நான் (ஜெயலலிதா) ஆட்சியில் இருக்கும்போதே பல பெரிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தீட்டி அவற்றிற்கு தேவையான ஆயத்த பணிகளை (?) செய்ய நான் நடவடிக்கை எடுத்தேன். அந்த நேரத்தில் தேர்தல் வந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்டது” என்று பேசியிருக்கிறார். இது என்ன ஏமாற்றம்? ஆயத்தப் பணிகளை செய்ய ஜெயலலிதா நடவடிக்கை எடுத்தாராம். அதற்குள் தேர்தல் வந்து விட்டதாம்? ஏன் ஆட்சிக்கு வந்தவுடனே ஆயத்தப் பணி களைச் செய்து, ஆட்சியிலே இருந்தபோதே, தேர்தல் வருவதற்குள்ளாகவே மின் உற்பத்தியை தொடங்கி இருக்கலாமே? தி.மு. கழக ஆட்சியிலே அப்படித்தானே

2006ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததும், உடனடியாக ஆயத்தப் பணிகளைச் செய்து, 2006ஆம் ஆண்டிலும், 2007ஆம் ஆண்டிலும், 2008ஆம் ஆண்டிலும் மின் உற்பத்திக்கான திட்டங்கள் தொடங்கப்பட்டன. அப்படி தொடங்கிய திட்டங்கள் மூலமாகத்தானே இன்னும் இரண்டொரு மாதங்களில் தமிழ்நாட்டிற்கு மின்சாரம் கிடைக்கவுள்ளது. அதற்கெல்லாம் காரணம் தி.மு. கழக ஆட்சியா? அல்லவா?

2001 முதல் 2006 வரையிலான தனது ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாக இருந்தது என்று ஜெயலலிதா சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டில் மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா? இல்லையா? அதுபோலவே 3–10–1982 முதல் 26–7–1984 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா இல்லையா? அது என்னுடைய ஆட்சிக் காலம் அல்ல, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த காலம் என்று ஜெயலலிதா சொல்கிறாரா? எப்படியோ அதுவும் அ.தி.மு.க. ஆட்சிக் காலம்தான். 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிகத் தொழிற்சாலைகளை தமிழகத்திலே தொடங்காமல் இருந்திருந்தால் மின் கட்டுப்பாட்டு முறை வந்திருக்காதுதான். அதற்காக தொழில் வளர்ச்சியை

ஊக்குவிக்காமல் அ.தி.மு.க. அரசைப் போல ஓர் அரசு இருக்க முடியுமா?

கடந்த ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்த முதல் அமைச்சர் ஜெயலலிதா தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றும் சொன்னார். அந்தத் துறையின் அமைச்சர், நத்தம் விசுவநாதன் "இந்தியா டுடே" இதழுக்கு 2012, பிப்ரவரி மாதம் அளித்த பேட்டியில், "இந்த மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும் தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். இந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக் கொண்டால் தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்று சொன்னார். ஆனால் நேற்றைய பேச்சில் முதலமைச்சர் ஜெயலலிதா அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இவற்றில் எதுதான் உண்மை? எது எப்படியோ; தமிழ்நாட்டில் மின் வெட்டு தீரும் நாள் எந்நாளோ? அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலி ருந்து அகற்றப்படும் நாளே அந்நாள்!

இந்த வார ஜூ.வி. இதழிலே கூட "ஆற்காடு வீராசாமியின் மின்வெட்டுக்கும், நத்தம் விஸ்வநாதனின் மின்வெட்டுக்கும் என்ன வித்தியாசம்" என்ற கேள்விக்கு,

“ஆற்காடு வீராசாமிக்கு கொஞ்சமாவது உறுத்தல் இருந்தது, தன்னால் தான் தி.மு.க. ஆட்சிக்கு கெட்ட பெயர், ஒருவேளை தோற்றால், இந்த மின் வெட்டுதான் முக்கியமான காரணம் என்று! ஆனால் நத்தம் விசுவநாதனுக்கு அந்த மாதிரி எந்தக் கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. அது வேற டிபார்ட்மென்ட் மேட்டர். அதுவும் பக்கத்து ஸ்டேட் மேட்டர் என்று நினைப்பது போலவே மெத்தனமாக இருக்கிறார்” என்று எழுதியுள்ளது. எனவே தமிழகத்தின் மின்வெட்டை ஆட்சியாளர்கள் இந்த அளவில் நமக்கு என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கழக ஆட்சியில் வெறும் இரண்டு மணி நேரம் மட்டுமே இருந்த மின் வெட்டு, அ.தி.மு.க. ஆட்சியில் தற்போது தமிழக வரலாறு இதுவரை கண்டிராத கொடுமையாக பதினாறு மணி நேரம் மின் வெட்டு, கடும் மின் வெட்டுப் பிரச் சினையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி யிருக்கும் பொது மக்கள் தினமும் தெருவுக்கு வந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். பல நூறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை இழந்து வாடிக் கொண்டிருக் கிறார்கள். உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்பட்டு மாநிலப் பொருளாதார நிலை தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இக்கட்டான இந்த கால கட்டத்தில்;

கழகத்தின் சார்பில் தரப்படும் விளக்கங்கள் ஒருபுறமிருக்க – ஆட்சிப் பொறுப்பிலே உள்ள அ.தி.மு.க., மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க, சிந்தித்து, முறையாக வழி காண்பதை விட்டு விட்டு; வீண் குற்றச் சாட்டுகளை மற்றவர்கள் மீது அடுக்கிக் கொண்டு காலத்தைக் கழிப்பது கண்டு யாரும் காலவரையறையின்றி பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து செயலாற்றுவதே சிறப்பு!

**‘முரசொலி’** **அன்புள்ள,**

**28.10.2012** **மு.க.**

## எத்தனைக் காலம் இப்படி ஏமாற்றுவார்?

உடன்பிறப்பே,

31–10–2012 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் தி.மு.கழக உறுப்பினர்கள், மின் வெட்டு குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானத்தினை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டபோது;, அவையிலி ருந்து வெளியேற்றப்பட்டு, அதற்குப் பிறகு முதலமைச்சர் ஜெயலலிதா மின்சாரப் பற்றாக்குறை பற்றியும், மின்வெட்டு பற்றியும் நீண்ட நேரம் உரையாற்றியிருக்கிறார்.

கழக ஆட்சியிலே ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொண்டுவர எதிர்க் கட்சிகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டன என்பதை பேரவையின் கடந்த கால நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஒரு பிரச்சினையின் மீது எதிர்க்கட்சி உறுப்பினர் ஒத்திவைப்புத் தீர்மானமோ, கவன ஈர்ப்புத் தீர்மானமோ கொடுத்திருந்தால், அதன் மீது அரசு பதிலளிக்க விரும்பினால், முதலில் அந்தத் தீர்மானங்களைக் கொடுத்தவர்களை அந்தத் தீர்மானத்தின் மீது பேச அனுமதித்து, அவர்களின் கருத்துக்களுக்குப் பின்னர் அரசு

விளக்கம் தருவதுதான் கடந்த காலத்தில் இருந்து வந்த நடைமுறை.

கழக ஆட்சிக் காலத்தில் 13–11–2008 அன்று மின்வெட்டு குறித்து எதிர்க் கட்சிகள் எல்லாம் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானங் களைக் கொடுத்திருந்தபோது, பேரவைத் தலைவர் அந்தத் தீர்மானங்களுக்கு மதிப்பளித்து, அதன் மீது உறுப்பினர்களை நீண்ட நேரம் பேச அனுமதித்து, அதற்குப் பிறகு அந்தத் துறையின் அமைச்சரான, ஆற்காடு வீராசாமி விளக்கம் அளித்தார். அந்த விளக்கத்தை அவை நடவடிக்கைக் குறிப்பில் இன்றைக்கும் பார்க்கலாம். எதிர்க் கட்சிகளின் சார்பில் பல குற்றச்சாட்டு களைத் தெரிவித்தார்கள்.

எதிர்க்கட்சிக்காரார்கள் பல்வேறு பிரச் சினைகளின் மீது குற்றச்சாட்டுகளை பேரவையிலே வைப்பது அவர்களுடைய உரிமை; அதற்கு உகந்த பதில்களை அளிக்க வேண்டியது ஆளுங்கட்சியின் கடமை என்பதற்கேற்ப, அமைச்சர் தன் பதிலுரையில், “பேசியவர்கள் எல்லாம் பல நல்ல அரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள்” என்றுதான் குறிப்பிட்டார். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் பேரவை நடவடிக்கை களிலே பின்பற்றி வந்த பண்பாடு.

அது மாத்திரமல்ல; அதற்கு முதல் நாள், 12–11–2008 அன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்மானத்தின் மீது பேரவையில் விவாதம் நடத்தப்பட்டு, அதற்கு என்னுடைய பதிலுரை முடியும்போது மதியம் 1.10 மணியாகிவிட்டது. அதற்குப் பின்னர் சில மசோதாக்களை அறிமுகம் செய்ய வேண்டிய அவசரத்தில் அமைச்சர்கள் இருந்தபோது, அ.தி.மு.க.வின் கொறடாவாக இருந்த திரு. செங்கோட்டையன், "மிகவும் முக்கியமான மின்வெட்டுப் பிரச்சினை குறித்து விவாதிக்க சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் ஆகியவற்றைக் கொடுத்துள்ளேன். அது பற்றி விவாதிக்க வேண்டும்" என்றார். அதற்கு பேரவைத் தலைவர், திரு. ஆவுடையப்பன் அவர்கள், "நேரமாகிவிட்டது, மின் வெட்டு குறித்து விவாதத்துக்கு அடுத்த நாள் எடுத்துக் கொள்ளப்படும்" என்றார். அதனை செங்கோட்டையனும் ஏற்றுக் கொண்டு அமர்ந்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பாலபாரதியும் மின்வெட்டு குறித்துப்பேச வேண்டுமென்றார். அப்போது மின் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி எழுந்து, "மதிய உணவையும் விட்டு விட்டு மின்சாரம் பற்றி விவாதிப்பதில் தங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்றால், எவ்வளவு நேரம் உறுப்பினர்கள் பேசினாலும் அதற்கு பதிலளிக்கத் தயாராக உள்ளேன்" என்றார். உடனே அ.தி.மு.க.வினர் விவாதத்

துக்கு நாங்கள் தயார் என்றனர். ஆனால் பேரவைத் தலைவர், "இன்று நேரமாகி விட்டது, அடுத்த நாள் அதை எடுத்துக் கொள்ளலாம்" என்றார். ஆனால் அ.தி.மு.க. வினர் வெளிநடப்புச் செய்தனர். பேரவைத் தலைவரின் அறிவிப்பின்படியே மறுநாள் விவாதம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

மறுநாள் மின்சாரப் பிரச்சினை பற்றிய விவாதம் வருவதற்கு முன்பு நடைபெற்ற சட்டக் கல்லூரி மாணவர்கள் மோதல் காரணமான விவாதத்தில் அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளி யேற்றப்பட்டிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு மின்சாரப் பிரச்சினை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதால், அ.தி.மு.க. உறுப்பினர்கள் அதிலே பேச வேண்டுமென்று அதற்கு முன்தினமே கேட்டுக் கொண்டார்களே என்பதற்காக, முதலமைச்சராக இருந்த நான், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதாவின் அறைக்கே அமைச்சர்கள் மு.க.ஸ்டாலின், வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு ஆகியோரை அனுப்பி அங்கே யிருந்த ஓ.பன்னீர்செல்வம், செங்கோட்டை யன் போன்ற மற்ற அ.தி.மு.க. உறுப்பினர் களையெல்லாம் மீண்டும் அவைக்கு வந்து மின் வெட்டு குறித்த விவாதத்தில் பங்கேற்கு மாறு கேட்டுக்கொள்ளச் செய்தேன்.. ஆனால் அ.தி.மு.க.வினர் சபைக்கு வரவில்லை. அவர்கள் வராவிட்டாலும் மற்ற எதிர்க்கட்சிக்

காரர்கள் எல்லாம் அந்த விவாதத்தில் பங்கேற்றார்கள். கழக ஆட்சியில் பேரவை விவாதங்கள் ஜனநாயக முறைப்படி இப்படித்தான் நடைபெற்றன என்பதற்கு இந்த ஒரு உதாரணம்போதும் என்று நினைக் கிறேன். வெளியேற்றப்பட்டவர்களை மீண்டும் அவை விவாதத்தில் கலந்து கொள்ளும்படி நேரில் சென்று அழைத்தது தி.மு.கழக ஆட்சியின் பெருந்தன்மையும், அரசியல் பண்பாடும் ஆகும்.

அமைச்சர் ஆற்காடு வீராசாமி அப்போது பதிலளிக்கும்போது, 2007ஆம் ஆண்டு வரையிலே உபரி மின்சாரம் தமிழகத்திலே இருந்ததைக் குறிப்பிட்டதோடு, அதற்குப் பிறகு மின் பற்றாக்குறை ஏன் ஏற்பட்டது என்பதையும், அதனைப்போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதையும் விளக்கினார். அந்தப் பதிலில்,

“நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களே டெல்லிக்குச் சென்று, பிரதமரைச் சந்தித்து, அன்னை சோனியா காந்தி அவர் களையும் சந்தித்து, தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக் கின்ற மின்சாரப் பற்றாக்குறையைப் போக்க மத்திய அரசாங்கம் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டபோது, 300 மெகாவாட் மின்சாரத்தை உடனடியாக முதலமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்து இறங்கு வதற்கு முன்னாலேயே கொடுத்தார்கள். அதைப் போலவே அடுத்து இரண்டு மாதங்கள் கழித்து நான் (ஆற்காடு

வீராசாமி) டெல்லிக்குச் சென்று மின் துறை அமைச்சரைச் சந்தித்து, மேலும் அதிகமாக மின்சாரம் வேண்டும் என்று கேட்டபோது, அப்போதும் 300 மெகாவாட் மின்சாரம் உடனடியாக வழங்கப்படும் என்று அறிவித்தார்" என்று குறிப்பிட்டு, இதுவும் அவை நடவடிக்கைக் குறிப்பிலே உள்ளது.

ஆகவே "அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்!" என்பது பழமொழி! அப்போது முதல் அமைச்சராகிய நானும், மின் துறை அமைச்சரும் நேரில் சென்று கோரிக்கை வைத்ததால் உடனடியாக மின்சாரம் கிடைத்தது என்பதற்காகச் சொல்கிறேன்.

தற்போதுள்ள மோசமான மின் வெட்டுக் குக் காரணமே முந்தைய தி.மு.க. அரசுதான் என்று முதல் அமைச்சர் ஜெயலலிதா, பேரவையில் சொல்லியிருக்கிறார். தி.மு.க. ஆட்சி நடத்தியபோது தற்போது உள்ளதைப் போல 15 மணி நேரம் மின் வெட்டா இருந்தது என்று கேட்டால் இல்லை, இல்லவே இல்லை.

மின் தட்டுப்பாடு நிலைமைக்கு அ.தி.மு.க. அரசுதான் காரணம் என்று ஒரு சில எதிர்க்கட்சிகள் கூறுவது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என்று முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார். மின் தட்டுப்பாடு நிலை மைக்கு அ.தி.மு.க. அரசுதான் காரணம் என்று சில

எதிர்க்கட்சிகள் அல்ல – தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் அனைவரும், ஒருமுகமாக இந்த மின் வெட்டுக்கும், அதைச் சமாளிக்க முடியாத இயலாமைக் கும் இந்த அ.தி.மு.க. அரசுதான் காரணம், காரணம் என்று அய்யம் திரிபற அழுத்தந் திருத்தமாகக் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

தற்போது தமிழகத்தில் ஏற்பட்ட மின் பற்றாக்குறைக்கு, ஏற்கனவே இருந்த தி.மு.க. அரசுதான் காரணம் என்கிறாரே முதல் அமைச்சர், அப்படியென்றால் 1991 முதல் 1996 வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1,302 மெகாவாட் மின் நிறுவு திறனும், 2001 முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2,518 மெகாவாட் மின் நிறுவு திறனும் ஏற்படுத்தப்பட்டது என்று சொல்லியிருக் கிறாரே, இதற்கு மட்டும்; அவருடைய அந்த ஆட்சிக் காலத்திற்கு முன்பு நடைபெற்ற தி.மு.கழக ஆட்சி காரணம் இல்லையா? பற்றாக்குறை என்றால் கடந்த கால ஆட்சி தான் காரணம், மின் உபரி என்றால் அதற்கு மட்டும் கடந்த கால ஆட்சி காரணம் இல்லையாம்! இதற்குப் பெயர்தானே விதண்டாவாதம் என்பார்கள்!

2001 முதல் 2006 வரையிலான அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது, மின் தட்டுப்பாடே தமிழகத்தில் இல்லை என்று ஜெயலலிதா சொல்கிறாரே, அதற்குக் காரணம் 2001ஆம் ஆண்டுக்கு முன் நடைபெற்ற தி.மு. கழக

ஆட்சியின் செயல்பாடுகள் அல்லவா? கழக ஆட்சியில் அப்போது மேற்கொண்ட நடவடிக்கைகளின் காரணத்தால்தான் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் மின் தட்டுப்பாடே தமிழகத்தில் இல்லாத நிலை ஏற்பட்டது. இப்போதும்கூட, கடந்த கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட மின் திட்டங்கள் எல்லாம் முழுமை அடைந்து அவற்றிலிருந்து மின் உற்பத்தி கிடைத் திருக்குமேயானால், தற்போதுள்ள மின் பற்றாக்குறை இருக்காது. அ.தி.மு.க. ஆட்சியில் தமிழகம் மின்சாரத்தில் உபரி மாநிலமாக இருந்தது என்று சொல்கிற முதல் அமைச்சர், தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் மின் துறை அமைச்சராக இருந்த ஆற்காடு வீராசாமி 3–4–2007 அன்று அவையில் பேசியதையும் குறிப்பிட்டிருக்கிறார். அப் போது அவர் என்ன சொன்னார்? "....நாம் மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாகத் தான் இருக்கிறோம். இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியிலே உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும்தான். இப்போது மராட்டிய மாநிலத்திற்கு உபரி மின்சாரத்தை விற்பனை செய்கிறோம். பஞ்சாப் மாநிலத்திற்கு விற்பனை செய்கின்றோம்..." என்றெல்லாம் பேசியிருப் பதில் இருந்தே, கழக ஆட்சிக் காலத்திலும் மின்சாரத்தில் தமிழகம் உபரி மாநிலமாகத் தான் இருந்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகிறது அல்லவா?

கடந்த தி.மு.கழக ஆட்சியில் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப்பட்டது என்று ஒரு குறைபாட்டை ஜெயலலிதா சொல் கிறார். மக்களின் தேவைக்காக, நாட்டை இருண்ட நாடாக ஆக்காமல் இருக்க, தொழிற்சாலைகள் மூடப்பட்டு, ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப் படாமல் இருப்பதற்காகக் கழக ஆட்சியில் அதிக விலை கொடுத்து மின்சாரம் வாங்கப் பட்டிருக்கலாம். உரியதைச் செய்து மக்கள் அல்லல்படாமல் பாதுகாப்பதுதான் ஒரு நல்லரசு.

உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் வி.பாலாஜி அவர்கள் தாக்கல் செய்த மனுவிலேயே; தமிழ்நாடு மின் வாரியம் 1100 மெகாவாட் மின்சாரம் வாங்க பல்வேறு மாநிலங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது என்றும், ஆனால் மாநிலங்களுக்கிடையே மின்சாரம் தடையின்றி கொண்டு வரப் போதுமான கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர மத்திய அரசு தேவையான நடவடிக்கை களை எடுக்கவில்லை; அதனால் அந்த மின்சாரம் வரவில்லை என்றும், மின் கடத்தி இடைவழிகளை உருவாக்க மத்திய அரசுக்கு உத்தரவிடவேண்டும் என்றும் கூறப் பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத்தில் நமது முதலமைச்சர் இந்த வழக்கைத் தொடுப்பதற்கு முன்பு பிரதமருக்கு

மின்சாரம்கோரி கடிதம் ஒன்றை 24-10-2012 அன்று எழுதியதற்குப் பிறகு, மத்திய மின்சாரத் துறை இணை அமைச் சர் திரு.கே.சி. வேணுகோபால் அவர்கள் கூறும் போது, “மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழ கத்துக்கு மின்சாரம் கொண்டு வருவதற் கான மின் வழித்தடத்தில் பிரச்சினை உள்ளது. தற்போதுள்ள மின் வழித் தடத்தில் கொண்டு வந்தால் கடும் மின்சார இழப்பு ஏற்படும். எனவே ரெய்ச்சூர் வழியாக புதிய மின் வழித்தடம் அமைக்கப் பட்டு வருகிறது. இந்தப் புதிய மின் வழித்தடம் அமைக்கும் பணி வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரிக்குள் நிறைவுபெறும். கூடங்குளம் அணு மின் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரத்தை நேரடியாக தமிழகத்துக்கு வழங்க இயலாது. மத்திய மின் தொகுப்புக்குக்கொண்டு சென்று அதிலிருந்து எந்த மாநிலத்துக்கு எவ்வளவு கொடுப்பது என்பதைப் பிரதமர் முடிவு செய்வார்” என்று கூறியிருக்கிறார்.

தற்போது தமிழக அரசின் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்தின் (டான்ஜெட்கோ) மூத்த அதிகாரி ஒருவரே ‘டெக்கான் கிரானிக்கல்’ நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில்,

“தேசிய மின் இணைவமைப்பிலிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்யவோ, தெற்கு மின் இணைவமைப்பில் வழியில் தற்போதுள்ள நெரிசல் நீங்கி

சுலபமாவ தற்கோ, 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழகம் காத்திருக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

"தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, புதுவை மாநிலங்கள் அடங்கிய தெற்கு மின் இணைப்பு; தேசிய மின் இணைவமைப்புடன் ஒருங்கிணைக்கப்படவில்லை. தெற்கு மின் இணைப்பை; தேசிய மின் இணைவமைப்பின் பகுதியோடு இணைப்பதற்காக இந்திய மின்சார மின் இணைவமைப்புக் கார்ப்ப ரேஷன் கர்நாடகாவிலுள்ள ரெய்ச்சூருக்கும், மகாராஷ்டிராவிலுள்ள ஷோலாப்பூருக்கும் இடையில் 800 கிலோ வோல்ட் மின் கடத்தி இணைவமைப்பை அமைத்து வருகிறது" என்று அந்த அதிகாரியே விளக்கினார்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்திக்காக என்னென்ன திட்டங்கள் தொடங்கப்பட்டன என்பது பற்றி முதலமைச்சர் ஜெயலலிதா தனது பேச்சில் ஏன் தெரிவிக்க வில்லை என்று நான் கேட்டதற்கு, முதலமைச் சர் ஜெயலலிதா பேரவையில் சில திட்டங் களின் பெயர்களைச் சொல்லியிருக்கிறார். நான் முதல்வரிடம் தெரிந்து கொள்ள விரும்பியது, அவருடைய ஆட்சிக் காலத்தில் எந்தெந்த மின் திட்டங்கள் தொடங்கப் பட்டன, அவற்றிலிருந்து எவ்வளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது என்ற விவரங்களைத் தான்! ஆனால் அவர் என்ன பதில்

அளித்திருக்கிறார் என்றால், அவரது ஆட்சியில் வல்லூரில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவிட 12–7–2002 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்.ஓ.யு.) கையெழுத்திட்டோம் என்று சொல்லியிருக் கிறார். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (எம்.ஓ.யு.) கையெழுத்துப் போடுவதுதான் மின் உற்பத் திக்கான தொடக்கமா? 2002இல் புரிந்துணர் வில் கையெழுத்திட்டார்கள் என்றால், அதற்குப் பிறகு 2006ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சிதானே நடைபெற்றது. அந்த நான்கு ஆண்டுகளில் அந்தத் திட்டத்தை ஏன் தொடங்கவில்லை? புரிந்துணர்வு ஒப்பந்தத் தில் கையெழுத்திடுவதும், ஒப்புதல் வழங்கு வதும் மின் உற்பத்திக்கான திட்டங்களைத் தொடங்கியதாக அர்த்தம் ஆகாது.

ஜெயலலிதா தனது அறிக்கையில், அவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, புதிய மின் திட்டங்களை முழுமையான செயல்பாட்டிற் குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்ததன் காரணமாக – 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டம், மற்றும் 500 மெகாவாட் மின் திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் முதல் அலகு டிசம்பர் 2012இல் இருந்தும், 500 மெகாவாட் திறன் கொண்ட வல்லூர் மின் திட்டத்தின் இரண்டா வது அலகு மார்ச் 2013இல் இருந்தும், 600 மெகாவாட் மின் திறன்

கொண்ட வட சென்னை அனல் மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013இல் இருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன, இவைகளில் இருந்து தமிழ்நாட்டிற்கு 1,900 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்.

நான் கேட்க விரும்புவது – அம்மையார் இங்கே சொல்லியிருக்கின்ற இந்த மின் திட்டங்கள் அனைத்தும் எந்த ஆட்சியில், யாரால் தொடங்கப்பட்டன ? தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள்தானே இவை ! எனவே தமிழ்நாட்டிற்கு இந்த 1,900 மெகாவாட் மின்சாரம் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களிலிருந்து கிடைப் பதுதான் என்பதை ஜெயலலிதா தனது பேச்சிலேயே ஒப்புக் கொள்கிறார் என்று தானே பொருள்.

மேலும் ஜெயலலிதா தனது உரையில் – 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் முதல் அலகு ஏப்ரல் 2013இல் இருந்தும், 600 மெகாவாட் மின் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் திட்டத்தின் இரண்டாவது அலகு மே 2013இல் இருந்தும் முழு உற்பத்தியைத் தொடங்க இருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார். இந்தத் திட்டங்களும் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்கள்தான். இதில் வடசென்னை முதல் அலகு 18–2–2008 அன்றும், இரண்டாம் அலகு

16–8–2008 அன்றும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தொடங்கப் பட்டவைகளாகும். கழக ஆட்சியில் இந்தத் திட்டங்கள் ஆரம்பித்த காரணத்தால், இதன் மூலம் 1,200 மெகாவாட் மின்சாரம் 2013ஆம் ஆண்டிலே தமிழகத்திற்குக் கிடைக்க வுள்ளது.

ஜெயலலிதா நேற்று பேரவையில் பேசும்போது, தனது ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட மின் திட்டங்களைக் காழ்ப்புணர்வோடு தி.மு.கழக ஆட்சியில் தொடராமல் விட்டதால்தான் தற்போது மின் வெட்டு ஏற்பட்டுள்ளதாகச் சொல்லியிருக் கிறார். எம்.ஜி.ஆர். தொடங்கிய சத்துணவுத் திட்டத்தை மேலும் விரிவாகவும், முனைப் பாகவும் நடத்திக் காட்டிய ஆட்சிதான் கழக ஆட்சி. வடசென்னை அனல் மின் நிலை யத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு மின் திட்டத்தை தி.மு.கழக ஆட்சியில் 26–6–2007 அன்று தொடங்கி னோம் என்று நான் எழுதியிருந்தேன். அந்தத் திட்டத்திற்கு ஜெயலலிதா ஆட்சியிலேயே ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டது என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார்; ஏற்றுக் கொள்கிறேன். அந்தத் திட்டம் அ.தி.மு.க. ஆட்சியிலே ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டம் என்பதற்காக, தி.மு.கழக ஆட்சியிலே அதைத் தூக்கிப்போட்டு விட்டோமா? அந்தத் திட்டத்தை மேற்கொண்டு செயல் படுத்தி யிருக்கிறோம் என்பதற்கான உதாரணம்தான் இது. ஆனால் ஜெயலலிதா,

அ.தி.மு.க. ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதற்காக காழ்ப்புணர் வோடு நாங்கள் செயல்படுத்தவில்லை என்று சொல்லியிருக் கிறார். இப்படியெல்லாம் முரணான பல தகவல்களை இன்றைய தமிழக முதலமைச்சர்கூறி, தமிழ்நாட்டு மக்களை இன்னும் எத்தனைக் காலம் இப்படி ஏமாற்றுவார் ?

குஜராத்திலிருந்து மின்சாரம் வாங்கிட ஒப்பந்தம் போட்டதைப் பற்றி – அப்படி வாங்கினால், அதைத் தமிழகத்திற்குக் கொண்டுவர முடியுமா என்பதைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்ளாமல் ஜெயலலிதா அரசு ஒப்பந்தம் போட்டதைப் பற்றி நான் எழுதியதற்கு; ஒப்பந்தம் போட்ட பிறகுதான் மத்திய அரசுக்கு விண்ணப்பிக்க முடியும் என்பது எனக்குத் தெரியாதா என்று கேட்டிருக்கிறார். மத்திய அரசுக்கு விண்ணப் பிப்பதைப் பற்றி நான் கேட்கவில்லை. ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக, அந்த மின்சாரத்தை நாம் வாங்கினால், அதைத் தமிழகத்திற்குக் கொண்டுவர இயலுமா என்பதைப் பற்றி ஏன் முன் ஆலோசனை யுடன் செயல்படவில்லை என்றுதான் கேட்டிருந்தேன்.

2001 முதல் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சி – ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி – தமிழகத்தில் நடைபெற்றபோது மின் தட்டுப் பாடு என்ற பேச்சுக்கே இடம்

இல்லாத நிலைதான் நிலவியது என்று பேரவையில் முதலமைச்சர் ஜெயலலிதா பேசியிருக்கிறார். ஆனால் நான் என்னுடைய “உடன்பிறப்பு” கடிதத்தில் 1991 முதல் 1996 வரை ஜெயலலிதா ஆட்சி தானே நடைபெற்றது, அப்போது மின்வெட்டு இருந்தது உண்மையா இல்லையா என்றுதான் கேட்டிருந்தேன். ஜெயலலிதா தலைமையில் ஆட்சி நடைபெற்ற அந்தக் காலக் கட்டத்தில் 1991 செப்டம்பர் மாதம் 1ந்தேதி முதல் 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதம் வரையிலே மின் வெட்டு இருந்தது உண்மை. மறுக்க முடியுமா? அதைப் போலவே அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது, கிட்டத்தட்ட ஆறு முறை மின்சாரவெட்டு அமல்படுத்தப் பட்டிருக்கிறது. 1982இல் நான்கு நாட்களுக்கு 100 சதவிகிதம் மின்சாரவெட்டு இருந்தது.

“பல்வேறு மின் திட்டங்கள் மூலமாக 2014ஆம் ஆண்டுக்குள் சுமார் 7000 மெகாவாட் மின்சாரம் கிடைப்பதற்கு தி.மு.க. அரசு வழி செய்ததாக திரு. கருணாநிதி கூறியிருப்பது வெறும் கற்பனைக் கதை” என்று ஜெயலலிதா பேரவையில் சொல்லியிருக்கிறார். 13–11–2008 தேதிய பேரவையின் நடவடிக்கைக் குறிப்பை

எடுத்துப் படித்துப் பார்த்தாலே நான் சொன்னது உண்மையா, கற்பனைக் கதையா என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| வடசென்னை | 1,200 மெகாவாட் |
| மேட்டூர் | 600 மெகாவாட் |
| தூத்துக்குடி | 1,000 மெகாவாட் |
| உடன்குடி | 1,600 மெகாவாட் |
| வல்லூர் | 1,200 மெகாவாட் |
| ஜெயங்கொண்டம் | 1,500 மெகாவாட் |

ஆக மொத்தம் இதிலிருந்து 7,100 மெகாவாட் மின்சாரம் கிடைக்க கழக ஆட்சியில் வழிவகை காணப்பட்டது. அன்றையதினம் அவையில் உரையாற்றிய மின் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்களே, 7,400 மெகாவாட் மின்சாரத்தை மத்திய, மாநில அரசுகள் மூலமாக உற்பத்தி செய்யவிருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக் கிறார். தற்போது இந்தத் திட்டங்களில் ஒன்றிரண்டு செயல்படாமல் விட்டுப் போயிருக்கலாம். ஆனால் கழக ஆட்சியில் வழி வகை காணப்பட்டதைத்தான் நான் சொல்லியிருந்தேன். நான் சொல்வது கற்பனைக் கதையா? மக்கள் புரிந்து கொள்ளட்டும்.

**'முரசொலி'** **அன்புள்ள,**

**3.11.2012** **மு.க.**

# உண்மை எது? பொய்தான் எது?

கேள்வி :- முதலமைச்சர் ஜெயலலிதா வும், மின் துறை அமைச்சரும் திரும்பத் திரும்ப தமிழ்நாட்டில் மின் வெட்டுக்குக் காரணம் கடந்த கால தி.மு.க. அரசு தான் என்று குற்றஞ்சாட்டி வருகிறார்களே; கடந்த காலத்தில் பல அரிசனக் காலனி களுக்கு மின் இணைப்பு கொடுத்ததே தி.மு.கழக ஆட்சிதானே?

கலைஞர் :- 1972ஆம் ஆண்டு, அதாவது நாற்பதாண்டுகளுக்கு முன்பு, நிதி அறிக்கை மீதான விவாதத்துக்கு நான் பேரவையில் பதிலளித்த போதே – “1966ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் அரிசனக் காலனிகள் இருக்கின்றன. அதில் 2,400 குடியிருப்புகளுக்குத் தான் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டிருந்தது. 1967–ல் கழக அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு 4 ஆண்டுக் காலத்தில் 15,600 அரிசனக் குடியிருப்பு களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது” என்று கூறியதை இன்றைக்கும் அவைக் குறிப்பிலே பார்க்கலாம். நேரிலும் காணலாம்.

மீண்டும் 1973ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12ந்தேதி பேரவையிலும், 13ந்தேதி மேலவை யிலும் ஆளுநர் உரைக்கு நான் பதிலளித்தேன். அப்போதும் நான், "இன்று இந்த ஆட்சியிலே 20 ஆயிரம் காலனிகளுக்கு மின்விளக்குகள் போடப்பட்டு முடிந்துவிட்டது" என்று குறிப்பிட்டேன். அன்றைய தினம் நான் மின்சாரம் பற்றிப் பேசும்போது மட்டும் எதிர்க்கட்சிகளின் சார்பில் 7 முறை குறுக்கிட்டு என்னிடம் விளக்கம் கேட்டார்கள். அனைத்துக் குறுக்கீடு களுக்கும் நான் பொறுமையாகத் தான் பதில் சொன்னேன்.

இந்தியாவிலேயே முதலாவதாக தமிழ்நாடு விவசாயிகள் அனைவருக்கும் விவசாயத்திற் காகப் பயன்படுத்தப்படும் பம்பு செட்டுக்கான மின்சாரத்தை முன் தேதியிட்டு அதாவது 1–9–1990 முதல் இலவசமாக வழங்குவதென்று கழக ஆட்சியில் 17–11–1990 அன்று ஆணை யிடப்பட்டது. இதன் காரணமாக தமிழகத்தில் சுமார் 16 லட்சம் விவசாயிகள் பயனடைந்தார்கள். அதன் பின்னர் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு விவசாயிகளுக்கான இலவச மின்சாரத்தை நிறுத்தி, எதிர்க்கட்சிகள் எல்லாம் போராடிய பிறகு தான் மீண்டும் இலவச மின்சாரம் கொண்டு வரப்பட்டது.

1991 முதல் 1996 வரையில் அதிமுக ஆட்சி நடைபெற்ற ஐந்தாண்டுகளில் 1,43,706 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுத்த தற்கு மாறாக, 1996 முதல் 30–11–2000 வரையிலான கழக ஆட்சியில், 2,73,973 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டது. அதைப்போலவே 2001 முதல் 2006 வரை அ.தி.மு.க. ஆட்சியில் 15,90,276 வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுத்ததற்கு மாறாக, நான்கரை ஆண்டு கழக ஆட்சியில் 23,69,459 வீடுகளுக்கு மின் இணைப்பு தரப்பட்டது. கழக ஆட்சியில் ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு என்ற திட்டத்தின் கீழ் 2,07,597 குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. 1996 முதல் 2001 வரையிலான தி.மு. கழக ஆட்சிக் காலத்தில் மட்டும் 1,64,290 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் தரப்பட்டுள்ளன. இந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் கடந்த தி.மு.கழக ஆட்சியில் நிறை வேற்றப்பட்ட சாதனைகளுக்கான புள்ளிவிவரங் களாகும்.

கேள்வி:– தமிழ்நாட்டின் மின் வெட்டு நிலைமையை மூன்றே மாதங்களில் சீர் செய்வேன் என்பது போன்ற எந்த வாக்குறுதி யையும் தான் அளிக்கவில்லை என்று முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் சொல்லியிருக்கிறாரே ?

கலைஞர் :– இதற்கு பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களே அவ்வாறு முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்ததற்கான ஆதாரங்களை நிரூபித்தால் முதலமைச்சர் அரசியலில் இருந்து விலகத் தயாரா என்று கேட்டிருக்கிறார். நான் அவ்வாறு கடினமாகக் கேட்க விரும்பவில்லை.

28–10–2012 தேதிய என் "உடன்பிறப்பு"க் கடிதத்தில் "கடந்த ஆண்டு ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்த முதல் அமைச்சர் ஜெயலலிதா தற்போதுள்ள 3 மணி நேர மின்வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்றும் சொன்னார். மின் துறை அமைச்சர்; இந்தியா டுடே இதழுக்கு அளித்த பேட்டியில் "இந்த மார்ச் முதல் மே மாதம் வரையில் மட்டும்தான் தமிழகம் மின் பற்றாக்குறையை அனுபவிக்கும். இந்த மூன்று மாதங்களை மட்டும் பொறுத்துக் கொண்டால் தமிழகத்தில் மின் பற்றாக்குறையே இருக்காது" என்று சொன்னார். முதலமைச்சர் அண்மையில் பேசும்போது, அடுத்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை முழுவதும் தீர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இவற்றில் எது தான் உண்மை ?" என்று தான் கேட்டிருந்தேன். ஆனால் இப்படி எந்த வாக்குறுதி யையும் அளிக்கவில்லை என்று

சட்டப்பேரவையில் ஜெயலலிதா சொல்லியிருக்கிறார். பேரவையில் கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு முதலமைச்சர் பதிலளித்த நாள் 10–6–2011. அவருடைய பதில் உரை 11–6–2011 நாளேடு களில் வந்துள்ளது. இதோ "தினத்தந்தி" நாளிதழிலேயே வெளிவந்த முதல்வரின் உரை வருமாறு:–

"தற்போது எனது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக அறிவிக்கப் படாத மின் வெட்டுகள் நிறுத்தப்பட்டு விட்டன. மேலும், வரும் ஜூலை மாதம் முதல் தமிழ் நாட்டில் தற்போதுள்ள 3 மணி நேர மின் வெட்டு 2 மணி நேரமாகக் குறைக்கப்படும். படிப்படியாக, மின்வெட்டே இல்லாத மாநிலமாக தமிழகம் விரைவில் மாறும் என்பதை மகிழ்ச்சி யுடன்தெரிவித்துக் கொள்கிறேன்" என்று வெளிவந்துள்ளது.

இதிலிருந்தே முதல்வர் ஜெயலலிதா மின்வெட்டு குறித்து வாக்குறுதி அளித்தது உண்மை என்பதையும், தற்போது பேரவையில் வாக்குறுதி எதையும் அளிக்கவில்லை என்று கூறுவது உண்மைக்கு மாறான தகவல் என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

**'முரசொலி'** **கலைஞர் பதில்கள்**

**6.11.2012**

## திசை திருப்பும் முயற்சியால் பிரச்சினை தீருமா ?

உடன்பிறப்பே,

மின்சார நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போகிறது! இன்றைய தினம் வெளிவந்த "தினமணி" நாளிதழிலேயே "முடங்கியது காற்றாலை மின் உற்பத்தி: மாவட்டங்களில் 14 மணி நேர மின்வெட்டு" என்ற தலைப்பில் "காற்றாலை மின் உற்பத்தி முழுவதுமாக நின்று போனதைத் தொடர்ந்து சென்னையைத் தவிர்த்த பிற மாவட்டங்களில் அறிவிப்பில்லாத மின் வெட்டு நேரம் மீண்டும் 14 மணி நேரத்துக்கு மேல் அதிகரித்துள்ளது" என்று நீண்ட கட்டுரையில் வெளியிட்டுள்ளது.

ஆனால் இங்குள்ள அ.தி.மு.க. அரசோ ஏற்கனவே இருந்த தி.மு. கழக அரசின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்த்தது. ஆனால் அதுகுறித்து நான் இரண்டு கடிதங்கள் விரிவாக எழுதிய பின், மத்திய அரசின் மீது பழியைச் சுமத்திட முற்பட்டார்கள். பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். ஆனால் பிரதமர் பதில் எழுதவில்லை என்று கூறி, உச்ச நீதி மன்றத்தில் மத்திய அரசின் மீது திட்ட மிட்டுக் குறை கூறி வழக்கு தொடுத்தார்கள்.

தமிழக அரசு தொடுத்த வழக்கில், "டெல்லி மாநில அரசு 1721 மெகாவாட் மின்சாரத்தை மத்திய தொகுப்புக்கு

திருப்பிக் கொடுத்துவரு கிறது. இந்த உபரி மின்சாரத்தை தமிழ் நாட்டிற்கு வழங்க வேண்டுமென மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். அது மட்டு மன்றி டெல்லியிலிருந்து மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரும் வகையில் மின் தடத்தை ஏற்படுத்தித் தரவும் மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கோரிக்கை வைத்தார்கள்.

உச்ச நீதி மன்றத்தில் தமிழக அரசு வைத்த இந்த இரண்டு கோரிக்கைகளில் உபரி மின்சாரத்தை மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு ஒதுக்குவது என்பது சுலபமாக உடனடியாகத் தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினை. ஆனால் அந்த மின்சாரத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரும் வகையில், மின் தடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற கோரிக் கையை நினைத்த வுடன் செய்துவிட முடியாது. இது பொறியாளர்களுக்கும், அரசு அலுவலர் களுக்கும் நன்றாகவே தெரியும். ஆனாலும் தமிழக அரசு இந்தக் கோரிக்கையை உச்ச நீதி மன்றத்தில் தெரிவித்தது.

டெல்லியிலிருந்து தேவையான அரிசியைக் கொண்டு வர வேண்டுமென்றால், ரெயில் மூலமாகக் கொண்டு வந்துவிடலாம். அவசர அவசியம் கருதி மருந்து பொருள்களைக் கொண்டு வர வேண்டுமென்றால் விமானம் மூலம் உடனடியாகக் கொண்டு வரலாம். ஆனால் டெல்லியிலிருந்து மின்சாரத்தை ரெயில் மூலமாகவோ,

விமானம் மூலமாகவோ கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லை. மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கு என்று பிரத்தியேகமான கட்டமைப்பு முன்கூட்டியே உருவாக்கப்பட்டிருந் தால் அது உடனடியாக சாத்தியமாகும்.

உச்ச நீதி மன்றத்தில் நமது முதலமைச்சர் இந்த வழக்கைத் தொடுப்பதற்கு முன்பு பிரதமருக்கு மின்சாரம் கோரி கடிதம் ஒன்றை 24–10–2012 அன்று எழுதியதற்குப் பிறகு அவர்கள் அந்தக் கோரிக்கைக்கு பதிலளிக் காமல் இருந்து விடவில்லை. மத்திய மின்சாரத் துறை இணை அமைச்சர் திரு. கே.சி. வேணு கோபால் அவர்கள் இந்தக் கோரிக்கை குறித்து விளக்கிக் கூறும்போது, “மத்திய தொகுப்பிலி ருந்து தமிழகத்துக்கு மின்சாரம் கொண்டு வருவதற்கான மின் வழித் தடத்தில் பிரச்சினை உள்ளது. தற்போதுள்ள மின் வழித் தடத்தில் கொண்டு வந்தால் கடும் மின்சார இழப்பு ஏற்படும். எனவே ராய்ப்பூர் வழியாக புதிய மின் வழித்தடம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் புதிய மின் வழித் தடம் அமைக்கும் பணி வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரிக்குள் நிறைவு பெறும்” என்று சொல்லி அது அப்போதே ஏடுகளிலேயே வெளிவந்திருக்கிறது.

தமிழக அரசின் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்தின் (டான்ஜெட்கோ) மூத்த அதிகாரி ஒருவரே ‘டெக்கான் கிரானிக் கல்’ நாளேட்டுக்கு அளித்துள்ள பேட்டியில்,

“தேசிய மின் இணைவமைப்பிலிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்யவோ, தெற்கு மின் இணைவமைப்பின் வழியில் தற்போதுள்ள நெரிசல் நீங்கி சுலபமாவதற்கோ, 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழகம் காத்திருக்க வேண்டும்” என்று கூறியுள்ளார்.

மத்திய மின்சாரத் துறை இணை அமைச்சர் விளக்கிக் கூறியதில் இருந்தும், மின்வாரிய அதிகாரி “டெக்கான் கிரானிகல்” இதழுக்கு அளித்த பேட்டியில் இருந்தும், நாம் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை செய்தி என்னவென்றால், டெல்லியிலிருந்து உடனடி யாக தேவையான மின்சாரத்தை வழங்குவதற்கு மத்திய அரசு முன் வந்தாலுங்கூட, அந்த மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான கட்டமைப்பு தற்போதுதான் உருவாக்கப்பட்டு வருகிறது, அது முழுமையடைய 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை தமிழக அரசு காத்திருக்க வேண்டும் என்பதுதான். கடுமை யான மின் பிரச்சினை வரும் என்பதற்கான அறிகுறிகள் ஓராண்டுக்கு முன்பே தெரிந் திருந்தும் அதற்கான முன் முயற்சியில் அ.தி.மு.க. அரசு ஈடுபடவில்லை என்பதை மறந்துவிட முடியாது. இதை மனதிலே கொண்டு தமிழக அரசு டெல்லியிலி ருந்து மின்சாரத்தை வரவழைக்க எண்ணாமல், தமிழகத்திற்கு அருகிலே உள்ள மின் உற்பத்தி நிலையங்களி லிருந்து, தமிழகத்திற்குத் தேவை யான மின் சாரத்தை மத்திய

அரசிடமிருந்து கூடுதலாகப் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுவதே சாலச் சிறந்ததாக இருக்கும்.

மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான கட்டமைப்பைப் பற்றி கருத்திலே கொண்டு தான் மத்திய அரசு சார்பில் உச்ச நீதி மன்றத்தில் வாதிட்ட மத்திய அரசின் அட்டார்னி ஜெனரல் திரு. ஜி. இ. வாகன்வதி அவர்கள், “கூடுதல் மின்சாரத்தை உட்கிரகிக்கும் திறனை தமிழ்நாட்டு மின் தொகுப்பு பெற்றிருக்கவில்லை. எனவே தமிழ்நாட்டிற்கு, கூடுதல் மின்சாரம் வழங்க இப்போது இயலாது. இதற்கு தமிழ்நாடே பொறுப்பு. மேலெழுந்தவாரியாக இந்த மனுவை தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது” என்று தெரிவித்திருக்கிறார்.

ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத் திற்கு அதிலும் குறிப்பாக டெல்லியிலிருந்து தமிழகத்திற்கு மின்சாரத்தைக் கொண்டு வருவதற்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தற்போது இல்லை என்ற உண்மைகளை தமிழக அரசு தெரிந்து வைத்திருக்கிறதா? அல்லது தெரியாத நிலையில் உச்ச நீதி மன்றம் சென்றிருக்கிறதா? என்றே தெரியவில்லை. உச்ச நீதி மன்ற நீதிபதிகள் நேற்றைய தினம் இறுதியாக இந்த விவகாரம் குறித்து “தொழில் நுட்ப நிபுணர்கள் ஆய்வு செய்ய வேண்டும், தமிழக அரசு கோரும் மின்சாரத்தை

விநியோகிக்கும் அளவுக்குத் தென் மண்டல மின்பாதைத் திறன் உள்ளதா என்று நிபுணர்கள் மூலம் மத்திய மின்சார ஆணையம் ஆய்வு நடத்த வேண்டும். அதன் அறிக்கையை வழக்கின் அடுத்த விசாரணை நடைபெறும் நவம்பர் 29ஆம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே அது வரை நாமும் காத்திருக்க வேண்டியதுதான்.

ஆனால் இதற்கிடையே தமிழ்நாட்டில் உள்ள சில நாளேடுகள் மத்திய அரசுதான் இந்த மின்சாரத்தை வழங்க மறுப்பதைப் போலவும், தமிழக அரசிடம் எந்தத் தவறும் இல்லை என்பதைப் போலவும், எப்படியாவது தமிழக அரசையும், குறிப்பாக தமிழக முதல் அமைச்ச ரையும் எந்தப் பழியும் வந்து விடாமல் காப்பாற்று கின்ற முயற்சியிலே ஈடுபட்டு, அவ்வாறே செய்திகளை தொடர்ந்து வெளியிடுகின்றன. உச்ச நீதி மன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணை விவகாரங்களை உள்ளே விரிவாக வெளியிட்டாலுங்கூட, "தினமணி" நாளேடு தலைப்பில் "தமிழகத்துக்கு டெல்லி மின்சாரம் கிடையாது – உச்ச நீதி மன்றத்தில் மத்திய அரசு திட்டவட்டம்" என்று வெளியிட்டுள்ளது. அதைப்போலவே "தினமலர்" நாளேடு தலைப்பில் "முடியாது – தமிழகத்திற்கு உபரி மின்சாரத்தை வழங்க முடியாது – சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு திட்டவட்டம்" என்றும் வெளியிட்டுள்ளது. "தினத்தந்தி"

நாளேடோ "கூடுதல் மின்சாரத்தை தமிழ்நாட்டுக்கு வழங்க இயலாது – சுப்ரீம் கோர்ட்டில் மத்திய அரசு தகவல்" என்று வெளியிட்டுள்ளது. இப்படி;

"கிடையாது"

"இயலாது"

"முடியாது"

– என்று மத்திய அரசு கூறியதாக பழி சுமத்தி மாநில முதலமைச்சருக்கு துளி அளவு கெட்டப் பெயரும் வந்துவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருக்கின்றன இங்குள்ள சில நாளேடுகள்! எனவே மத்திய அரசுக்கு தமிழகத்திற்கு மின்சாரம் வழங்கக் கூடாது என்பது எண்ணமல்ல. அந்த மின்சாரத்தை வழங்கினால், உடனடியாக அதை எடுத்துச் செல்ல வழியில்லை என்பதைத்தான் மத்திய அரசு தெரிவிக்கின்றது.

அதைத் தெரிந்து கொண்டுதான் மத்திய அரசு அந்த வழித்தடத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் உச்ச நீதி மன்றத்திலே தமிழக அரசு கோரிக்கை வைத்துள்ளது. மத்திய அரசுக்கும் அந்தக் கோரிக்கையை ஏற்பதில் சிரமம் இருக்காது. ஆனால் அந்தக் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டாலும், அது இன்று தொடங்கி நாளையே முடிவடைந்து விடுகின்ற ஒன்றா என்றால் நிச்சயமாக இல்லை. அதனால் பயன்

உடனடியாக தமிழகத்திற்குக் கிடைக்குமா என்றால் கிடைக்காது. அதற்கு என்ன வழி? மத்திய அரசுடன் பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை இது. அதைத்தான் விடுதலையில் கூட தமிழர் தலைவர் வீரமணி முன்பே எழுதியிருந்தார். எனவே எதிலும் பிறரைக் குற்றம் சாட்டி தான் தப்பித்துக்கொள்ளும் போக்கிலிருந்து விடுபட்டு தமிழக முதலமைச் சர் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டும். உடனடியாக முதல் அமைச்சரோ, மின் துறை அமைச்சரோ டெல்லி சென்று உரியவர்களோடு அமர்ந்து பேசி, தமிழகத்தின் மின் தேவையைத் தீர்க்க உடனடியாக என்ன செய்யலாம் என்று கலந்தாலோசித்து முடிவு காண வேண்டும். பள்ளிகளிலே சில சிறு பிள்ளைகள் எதற் கெடுத்தாலும் ஆசிரியரிடம் புகார் செய்வதைப் போல, "நான் உச்ச நீதிமன்றம் போகிறேன், வழக்கு தொடுக்கிறேன்," என்பது பிரச்சினையைத் தீர்க்க நிச்சயமாக உதவிடாது.

**'முரசொலி'** — **அன்புள்ள,**

**10.11.2012** — **மு.க.**

